

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பேரிடர் குறைப்பு தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (13.10.2016) கொடியசைத்து, துவக்கி வைத்தார்கள்.

மாவட்ட வருவாய் அலுவலுர் திரு.எஸ். இளங்கோ, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.வெ.ஜெயக்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 712/2016 நாள்: 13.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பேரிடர் குறைப்பு தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை இன்று (13.10.2016) கொடியசைத்து, துவக்கி வைத்தார்கள்.**

ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 13- ம் தேதியை சர்வதேச பேரிடர் குறைப்பு தினமாக அறிவித்துள்ளது. அதன்படி இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் ஒவ்வொரு ஆண்டும் பேரிடர் குறைப்பு தினமாக செயல்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பேரிடர் குறைப்பு தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (13.10.2016) கொடியசைத்து, துவக்கிவைத்து தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்திலுள்ள பொது மக்களிடம் பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்று எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளி, டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஹோம் சர்ச் மேல்நிலைப்பள்ளிகளிலிருந்து சுமார் 500-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற பேரணி துவக்கி வைக்கப்பட்டது.

மேலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களிடம் பேரிடர் மேலாண்மை குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெறும் மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

குறிப்பாக இயற்கை இடர்பாடுகள் ஏதேனும் ஏற்படும் போது பொதுமக்கள் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு 1077 என்ற எண்ணில் தெரிவிக்க வேண்டும். மேலும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பாக காண்பிக்கப்பட்ட தீயணைப்பு ஒத்திகையை பள்ளி மாணவ, மாணவியர்கள் நன்றாக மனதில் பதித்து கொள்வதோடு, உங்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு தீ விபத்து ஏற்படும்போது எவ்வாறு அதிலிருந்து மீள வேண்டும் என்பதை விளக்கி கூறி, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நாகர்கோவில், எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளியில் துவக்கி வைத்த பேரணியானது, டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பர்வதவர்த்தினி தெரு வழியாக சென்று மீண்டும் எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு வந்து நிறைவடைந்தது.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலுர் திரு.எஸ். இளங்கோ, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.வெ.ஜெயக்குமார், நாகர்கோவில் கோட்டாச்சியர் திரு.ஆர்.ராஜ்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி, மாவட்ட தீயணைப்பு அலுவலுர் திரு.சரவணபாபு, அகஸ்தீஸ்வரம் வட்டாச்சியர் திரு.எ.வி.மூர்த்தி, மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர்(நாகர்கோவில்) திரு.நடராஜன், எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.விஜயன், திரு.விஜயகுமார், திரு.ஆறுமுகம் பிள்ளை,நாகர்கோவில் நிலை அலுவலர்(தீயணைப்புத்துறை) திரு.சத்யகுமார் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.